**ஓம் ஈஸ்வராய நமஹ!**

# ஞானாலயம் குரு அன்னை முக்தி எய்தியதை (14 Sept 2020) குறித்து அகத்தியர் மகரிஷிகள் உரைத்தது

**எமதாசன் ஆறுமுகனாரின் அடி தொழுதே அகத்தீசன் உரைக்கின்றோம்.**

தென் எல்லைக் குமரியவள்
திருக்கயிலை தேவியவள்
மண்ணுலகில் அவதரித்த
மாசற்ற தெய்வம் அவள்
கண்களுக்கு விருந்தானாள்
கதிரவனின் ஒளியானாள்
வீரத்தில் வேங்கையானாள்
விவேகத்தில் விடிவெள்ளியானாள்
அறிந்தவருக்கு அன்பானாள்
புரிந்தவருக்கு புதல்வியானால்
உணர்ந்தவருக்கோ உத்தமியானாள்
உயர் ஆன்மாக்களுக்கு உறவானாள்
மகளானார், அன்னையானார்
மாணிக்க ஒளியானார்

கலியில் உதித்த நாயகியாம்
காற்றில் கலந்த செழு மணமாம்
அண்டி பணிவோர் ஆர்ப்பரிப்பர்
ஆன்ம தரிசனம் ஈட்டிடுவர்.

Gnanalayam

வட்டத்து மலர்களாகவும், சத்யயுக வித்தாகவும் எழுச்சியுற்ற மானுடர்களே!

உலகம் உய்வுற போராடிய குரு அன்னையின் ஆசி பெற்றவர்கள் நீங்கள். பாரத்வாஜ மகரிஷிகளின் மகனாய் அவதரித்து நான்கு யுகங்களையும் கடந்து கலி எல்லையில் எம்மையே சற்குருவாக ஏற்று "**யுகமாற்றம்"** என்கின்ற எமது ஈசப்பணியினை சிரம் ஏற்று நிகழ்த்திய **சதுர்வேதியானவரே உங்களது குரு அன்னையாவார்**.

18 வட்ட மலர்களை சேகரித்து அளிப்பதாக எமக்கு வாக்கு நல்கியுள்ளார். சரிபாதி வட்ட மலர்களுக்கு ஆன்ம விடுதலை நல்கினால் உயர்ந்த நிலையினை எய்திடுவார் என்றே யாம் உரைத்திட்டோம். கலி எல்லை காலத்தில் கலியினோடு போராடி மானுடர்களின் சிரசினிலே கழிவுகளாய் நிலைத்திட்ட கலியெனும் திரைகளை நீக்கி, வினைப்பயன்களை அகற்றி அருள் ஒளியாம் ஆன்ம ஒளியினை நல்கினார்.

அவதார நோக்கு கொண்டு புவியினில் உதித்திட்ட எங்கள் குலத்து உயர் ஆன்மாவினைக் கொண்ட மகளார் ஏன் தனது பணியானது நிறைவடையும் முன்னர் மறைந்தார் எனும் பெரும் வினாவானாது அனைவரையும் வாட்டுகின்றது. கலியுக மானுடர்கள் பல்வேறு திரைகளைக் கொண்டு ஆன்மாவினை மறைத்திட்ட காரணத்தால் சத்திய நிலைகள் புலப்படுவது இல்லை.

மகளார் ஆற்றிய பெரும் பணி என்பது வீரியம் அடைந்துள்ளது. மானுட உடல் தரித்து செயல்புரிந்திட்ட காலத்தில் மானுடர்களின் அறியாமை திரையினை நீக்கிட பெரும் போர் நிகழ்த்தினார். ஆன்ம விடுதலை தனை நல்கிட அவர் ஏற்றிட்ட பெரும் பணியினை எவராலும் உணர்ந்துவிட இயலாது.

மானுடராய் விழிகளுக்குத் தோன்றினாலும், அவர் கொண்ட ஆன்மா மிகவும்

வீரியம் வாழ்ந்தது. உயர் தெய்வங்களின் ஆன்ம ஆற்றல்களை வரங்களாய்ப் பெற்று சேரித்தார். மேலும் பல்வேறு சித்தர்களை பூஜித்து உலகம் உய்வுற வேண்டும் என்றும், சத்ய யுகம் மலர வேண்டும் என்றும் பணிந்துருகி தீவிரமான ஆன்ம ஆற்றல்களையும் சேகரித்தார் ஆற்றல் களஞ்சியமாய் நிலைத்திட்ட மகளார் புவியின் ஈர்ப்பு விசையினை மெல்லவே துறந்திட முனைந்திட்டார்

புவீர்ப்பு விசையற்ற நிலையில் மானுட ஆன்மாக்கள் உடலில் வசித்திட இயலாது. புவியின் நில ஆற்றல் எனப்படும் இரும்பு ஆற்றலாகிய நஞ்சிழை என்பது ஆன்மா கொண்டுள்ள காந்த ஆற்றலை ஈர்த்தே புவியினில் நிலை நிறுத்திடும். எத்தருணத்தில் காந்த ஆற்றல் பெருகுகின்றதோ அத்தருணத்தில் புவியிர்ப்பு விசைக்கொண்டு மானுட ஆன்மாக்களை ஈர்த்திட இயலாது.

மானுடர்களின் இருவேறு நிலைப்பாட்டினை உணர்தல் வேண்டும். புவியிர்ப்பு விசை எனப்படும் நஞ்சாற்றல் உடலினில் குன்றினால் ஆன்மா எனும் காந்தபுலமானது வீரியம் கொண்ட விண் ஆற்றலினால் ஈர்க்கப்படும். அவ்வகையில் ஆன்மாவின் ஆற்றல்கள் அளவினைக் கடந்த நிலையில் பெருகினால் புவியின் விசைக்கொண்டு ஈர்த்திட இயலாது, கட்டுறுத்தவும் இயலாது.

அவ்வகையில் ஞானாலயத்தில் குரு அன்னையாக செயல்புரிந்திட்ட மகளார் பல்வேறு ஆன்மாக்களுக்கு முக்தி நிலைதனை நல்கியதன் மூலம் அதீதமான ஆன்மா ஆற்றலைப் பெற்றார். உயர் ஆன்மாக்களின் காந்த ஆற்றலும் அவருக்கு பூரணமாய் நல்கப்பட்டது. ஈசனை கலந்து களிப்புற்று விண்ணிலே நிலைத்துவிட வேண்டும் என்றே அவர் கொண்ட தீராத ஆவலானது, மேற்கொண்ட உயிரின் நிர்ணயத்தினால் தடையுற்றது. வட்ட மலர்களை வித்துக்களாக சேகரித்தருளுவேன் என்றே எமக்கு ஈந்திட்ட வாக்கு ஒன்றே மகளரை விண்ணேறிடாது காத்திட்டது.

கலியின் தீவிர செயல் என்பது மாற்று நிலையினை விளைவித்திட்டது. கொடும் கலிபிணியினைக் கண்டு வாட்டமுற்ற மகளார் மானுடர்களின் பெரும் துன்பத்தினை கலைந்திட வேண்டும் என்றே வேண்டி நின்றார்.

மகளாரின் வேண்டுதலை ஏற்றே பாஷான மருத்துவமும் உரைக்கப்பட்டது. எனினும் கலியின் தீவிரமானது பரவி அம்மருத்துவ பொருளினையும் ஏற்றுவிட தடை விதித்தது. மானுடர்களை கலிப்பிணியிலிருந்து காத்திட வேண்டும் என்றே அவர் மேற்கொண்ட போரானது மாற்று விளைவுகளை நல்கியது. ஆதி சக்தியின் ஆற்றல்களால் நிறைந்த மகளானவர் என்னிடம் தீவிரமாய் பிரார்த்தனைகள் புரிந்திட்டார். காலங்கியாரும் மருத்துவம் உரைத்திட யாமும் ஓர் உபாயம்தனை நல்கினோம்.

கலியினில் தோன்றியுள்ள கொடும் பிணிதனை அக்னி கொண்டு ஏந்திடல் வேண்டும் என்றும், ஒளிப்பாலத்தில் பயணித்து விண்முகடு கடந்து சென்று புவியினை விட்டு விலகிடக் கோரி அக்னிதனை விண்ணிலே கலப்புறச் செய்திடல் வேண்டும் என்றுமே யாம் மார்க்கம் நல்கினோம். சூரிய ஒளியற்ற இரவுப்பொழுதினிலே இப்பணிதனை ஆற்றிடவே கோரினோம். விடியலிலே உடலினை மீண்டும் வந்தடைய வேண்டும் என்றும் உரைத்திட்டோம். எனினும் விண்முகடு கடந்த நிலையில் மகளாரின் வீரியம் மிகுந்த ஆன்மாவானது ஈசஆற்றலால் ஈர்க்கப்பட்டது.

புவிஈர்ப்பு விசையற்ற நிலையில் ஈசனோடு கலப்புற்ற ஒற்றை அணுவானது ஆன்மத்துகளாக மாற்றம் கொண்டது. அதன் பொருட்டே உடலினில் வெப்பத்தை நல்கி இயங்கிட இயலாத நிலையும் உருவானது. ஒற்றை அணுவானது ரேணுகாதேவியின் ஆற்றலினால் சூழப்பட்டு பெரும் இயங்கு சக்தியாய் நிலைத்திருந்த நிலையில் கலிப்பிணியினை நீக்கிட நிகழ்த்திட்ட போரினிலே ஈசனிடம் ஈர்ப்புக் கொண்டு இயக்கும் சக்தியாய் உருமாறினார்.

உடலானது ஒளிரூபம் கொண்டால் பெரும் வீண்மீனாய் நிலைதிடலாம். இருப்பினும் ஆன்மத்துகள்கள் யாவும் பெருகிட ஓர் உடலினையே அவை உருவாக்கிடும் என்ற மறைபொருளினையும் ஏற்கக் கடவது. விடுதலைக்கண்ட மானுட ஆன்மாக்கள் அளித்திட்ட ஆன்மத்துகள்களைத் தம்முள்ளளே ஏந்தியுள்ள மகளார் வீரியமான ஆன்மாவினைக் கொண்டவர். உடலானது ஆன்மாவாய் உருமாறினாலும் ஒளியுடல் சித்திக்கும். ஆன்மத் துகள்களே அதீதமாய் நிறைந்து ஓர் உடலாய் உருமாறினாலும் ஒளியுடல் சித்திக்கும். அவ்விதம் அனைத்து வட்ட மலர்களின் ஆன்ம துகளினையும் ஏற்று உயரிய ஒளியாய் காட்சி தரும் மகளாரை யுகம் உள்ளவரை மானுடர்கள் தொழுதிடுவர்.

ஈசனோடு கலப்புற்று மகிழ்வுற்ற மகளார் விரைந்து ஆலய ஜோதியோடு கலப்புற்று இயங்கிடுவார். யாம் எவ்விதம் மகளாரை இயக்கினோமோ அவ்விதமே மகளார் மானுட குலத்தை தனித்து இயக்கிடுவார். கலியினால் தடைகள் ஏதும் தோன்றாது. தனது உடலினையே கலிக்கு உணவாக அளித்துவிட்ட மகளார் மகோன்னத நிலையினை எய்தியுள்ளார். ஞானாலயத்தினைக் காண்பவர்களுக்கே முக்தி கிட்டும் நிலையும் உருவாகும். மகளாரான குருவினை எண்ணி பூஜிப்பவர்களுக்கும் உயர்ந்த ஞானம் பெருகிடும், கலியகன்றிடும், பிணிகள் நீங்கிடும், கர்மவினைகளும் நீக்கப்படும்.

**ஆன்ம விடுதலை வழங்கிடும் முக்தி ஸ்தலமாக ஞானாலயம் விளங்கிடும் என்றே முன்னர் உரைக்கப்பட்டது**. கலிப்பிணி என்பது ஒரு தொடர் செயலாகும். தோன்றிடும் பல்வேறு பிணிகளால் மானுடர்கள் வாட்டமுறுவர். கலியின்; எல்லையின் எல்லைக்கலத்தில் வசித்திடும் மானுடர்கள் ஆன்மாவினை அறிந்திட முனையவேண்டும். மற்றுமோர் பிறவி என்பது கொடியதாக அமைந்துவிடும். என்பதனை உணர்ந்து ஆன்ம விடுதலையினை எய்திட அனைவருக்கும் உதவி புரியுங்கள். கலி எல்லையில் எந்த ஒரு உயர்

Copyright © 2020 Gnanalayam 

ஆன்மாவும் அவதரிக்க முனைத்திடார் என்றுணர்க. பாதாளம் நோக்கிய பயணத்தை தவிர்த்து விண்ணோக்கிப் பயணித்திட அனைவருக்கும் எடுத்துரையுங்கள்.

மகளாரின் பணி என்பது வீரியமாய் தொடர்ந்திடும். எவ்விதம் தீட்சைகளும் ஆன்ம விடுதலையும் தொடரும் என்பதனையும் யாம் உரைத்திடுவோம். ஈசப்பணிதனை ஏற்று அனைத்து விடுதலையடைந்த ஆன்மாக்களும் குருவின் பணிக்கு உதவிடல் வேணடும். மானுட குலம் காத்திட அவதரித்து, கலியினை வென்றிட போராடி, வெற்றியினையும் ஈட்டிய இறுதி நிலையில் கலியின் தொடர்பினைத் துண்டித்த காரணத்தால் புவியின் ஈர்ப்பு விசையினை இழந்தார். அதன் மூலமே உடலினை துறந்தார். எனினும் இரட்டிப்பு ஆற்றல் கொண்டு வீர்யமாய் எழுச்சியுற்று அனைத்து மானுடர்களுக்கும் ஆற்றல்களை பகிர்ந்து உயர்வாய் செயல்புரிவார்.

ஆலய ஜோதியில் எங்களோடு கலப்புற்று உலகம் உய்வித்திடுவார். அனைத்து மானுட ஆன்மாக்களும் உய்வுற வேண்டும் என்ற இலக்கினைக்கொண்டே அனைவரும் செயல்புரிந்திட ஈசஅருள் பெருகிடும். சத்யயுகமும் மலர்ந்திடும்.

**வாழ்த்துகின்றோம்.**